# QB365 Question Bank Software Study Material

## விலங்கியல் - உயிரிய பல்வகைத்தன்மை மற்றும் அதன் பாதுகாப்பு முக்கியமான 1 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்(புத்தக & ஆக்கபூர்வமான வினாக்கள்)

## 12ம் வகுப்பு

## உயிரியல்

மொத்த மதிப்பெண் : 50

<u>சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக</u>

50 x 1 = 50

1) பின்வரும் மண்டலங்களில் அதிகபட்ச பல்வகைத் தன்மை கொண்ட பகுதி எது?

(அ) குளிர் பாலைவனம் **(ஆ) வெப்ப மண்டலக்காடுகள்** (இ) மிதவெப்ப மழைக்காடுகள் (ஈ) சதுப்பு நிலங்கள்

2) இயற்கையான வாழிடங்களினுள் உயிரிய பல்வகைத்தன்மை பாதுகாப்பு என்பது _____.

**(அ) சூழல்உள் பாதுகாப்பு** (ஆ) சூழல்வெளி பாதுகாப்பு (இ) உடலுள் பாதுகாப்பு (ஈ) உடல்வெளி பாதுகாப்பு

3) பின்வருவனவற்றில் எது சூழல்உள் பாதுகாப்பு வகையை சார்ந்தது அல்ல.

(அ) புகலிடங்கள் (ஆ) தேசிய பூங்காக்கள் **(இ) விலங்கியல் பூங்காக்கள்** (ஈ) உயிர்கோள காப்பிடம்

4) பின்வருவனவற்றில் இந்தியாவில் எது மிகை உள்ளூர் உயிரினப்பகுதி எது?

(அ) மேற்கு தொடர்ச்சி மலை (ஆ) இந்திய - கங்கை சமவெளி (இ) கிழக்கு இமயமலை தொடர்

**(ஈ) அ மற்றும் இ**

5) உயிரினங்களின் சிவப்பு பட்டியலை வெளியிட்டுள்ள நிறுவனம் ____.

(அ) WWF **(ஆ) IUCN** (இ) ZSI (ஈ) UNEP

6) உயிரியப் பல்வகைத்தன்மை என்ற வார்த்தையை அறிமுகப்படுத்தியவர் யார்?

(அ) எட்வேர்டு வில்சன் **(ஆ) வால்டர் ரோசன்** (இ) நார்மன் மியர்ஸ் (ஈ) ஆலிஸ் நார்மன்

7) பின்வரும் பகுதிகளில் எது பூமிக்கோளின் நுரையீரல் என அறியப்படுகிறது.

(அ) இலையுதிர் காடுகள் (ஆ) வடகிழக்கு இந்தியாவின் மழைக்காடுகள் (இ) ஊசியிலைக் காடுகள்

**(ஈ) அமேசான் காடுகள்**

8) வாழிட சீரழிவினால் மிக கடுமையான பாதிப்புகளுக்கு உள்ளாகி அழியும் நிலையில் உள்ள விலங்கினம் எது?

(அ) பாலூட்டிகள் (ஆ) பறவைகள் **(இ) இருவாழ்விகள்** (ஈ) முட்தோலிகள்

9) **கூற்று** – வெப்ப மண்டலப் பகுதிகளில் நிலவும் சுற்றுசூழல் தன்மைகள் உயிரினங்களின் சிற்றினமாக்கல் மற்றும் பல்வகைத்தன்மைக்குச் சாதமாகாக உள்ளன

**காரணம்** – பருவகாலம், தட்பவெப்பநிலை, ஈரப்பதம், ஒளிக்காலம் ஏறக்குறைய நிலையாகவும் உகந்ததாகவும் உள்ளது.

**(அ) காரணம் மற்றும் கூற்று இரண்டும் சரி, காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது**

(ஆ) காரணம் மற்றும் கூற்று சரி, காரணம் கூற்றை சரியாக விளக்கவில்லை (இ) கூற்று சரி, காரணம் தவறு.

(ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

10) ஒரு சிங்கத்தின் தனிப்பட்ட வாழிட பரப்பின் தேவை ________ ச.கி.மீ. ஆகும்.

**(அ) 100** (ஆ) 150 (இ) 200 (ஈ) 250

11) மொத்த நிலப்பரப்பு அல்லது புவியில் உள்ள அனைத்து வாழிடங்களுக் கிடையேயான வேறுபாடுகளை குறிப்பது ________ பல்வகைத் தன்மையாகும்.

(அ) பீட்டா (ஆ) ஆல்பா **(இ) காமா** (ஈ) மரபியல்

12) முக்குர்த்தி தேசிய உயிரியல் பூங்கா தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு ________

(அ) 1989 (ஆ) 1976 (இ) 1980 **(ஈ) 1990**

(அ) 1989 (ஆ) 1976 (இ) 1980 **(ஈ) 1990**

13) பின்வருவனவற்றில் சூழல்வெளி பாதுகாப்பிற்கு எடுத்துக்காட்டாக கருதபடுவது எது?

**(அ) விதைவங்கி** (ஆ) வனவிலங்கு புகலிடங்கள் (இ) தேசிய பூங்கா (ஈ) புனித தோப்புகள்

14) 1973ஆம் ஆண்டு _____ மாநிலத்தில் உள்ள ஜிம்கார்பெட் தேசிய பூங்காவில் புலிகள் திட்டம் தொடங்கப்பட்டது

**(அ) உத்தரகாண்ட்** (ஆ) குஜராத் (இ) அசாம் (ஈ) தமிழ்நாடு

15) மிக தரமான கம்பளி பொருட்களுக்கு இந்த இடம் மிகவும் புகழ் பெற்ற பகுதியாகும்.

(அ) மேற்கு தொடர்ச்சி மலை (ஆ) டெக்கான் தீபகற்பம் (இ) வடகிழக்கு இந்தியா

**(ஈ) இமயமலைக்கு அப்பால் உள்ள மண்டலம்**

16) பின்வருவனவற்றில் உயிரிய பல்வகைத் தன்மைக்கு மிகுந்த அச்சுறுத்தலாக உள்ள நிகழ்வு எது?

(அ) மிகை பயன்பாடு **(ஆ) வாழிட இழப்பு** (இ) இணை மராப்பற்றுப் போதல்

(ஈ) அயல்நாட்டு இனங்களின் உள்ளேற்றம்

17) ஒரு குறிப்பிட்ட பகுதி, சமுதாயம் அல்லது சூழ்நிலை மண்டலத்தில் வாழும் வகைப்பாட்டுத் தொகுதியின் எண்ணிக்கையை வைத்து அளவிடப்படுவது ______ பல்வகைத் தன்மையாகும்.

**(அ) ஆல்பா** (ஆ) பீட்டா (இ) காமா (ஈ) மரபியல்

18) உயிரிய பல்வகைத் தன்மை என்ற சொல்லை பிரபலப்படுத்தியவர் _____

(அ) வால்டர் ரோசன் **(ஆ) எட்வர்ட் வில்சன்** (இ) அலெக்ஸ்சாண்டர் (ஈ) நார்மன் மையர்ஸ்

19) சிறிய நிலப்பரப்பை உடைய பனாமாவின் வெப்ப மண்டலக் காடுகளில் _______ க்கு மேற்பட்ட சிற்றினங்களைச் சேர்ந்த மரங்கள் உள்ளன.

**(அ) 110** (ஆ) 200 (இ) 500 (ஈ) 300

20) இந்தியாவில் 50,000த்திற்கும் அதிகமான ________ மரபணு வகைகள் உள்ளன.

**(அ) நெல்** (ஆ) கோதுமை (இ) மா (ஈ) ஆப்பிள்

21) ஒரு வாழிடத்தில் உள்ள சிற்றின வகைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் செழுமை ________ பல்வகைத் தன்மை எனப்படும்.

(அ) ஆல்பா (ஆ) பீட்டா **(இ) சிற்றின** (ஈ) சூழ்நிலை மண்டல

22) ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ ________ புதிய இனங்கள் இனங்காணப்பட்டு உலகளாவிய அளவில் வெளியிடப்படுகின்றன.

(அ) 1-2000 **(ஆ) 10-15000** (இ) 100-500 (ஈ) 300-700

23) ________ உயிரிய மிகைப்பல்வகைத் தன்மை கொண்ட உலகநாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.

**(அ) 17** (ஆ) 19 (இ) 12 (ஈ) 11

24) இந்திய பாலைவனப் பகுதிக்கும், தக்கான பீடபூமிக்கும் இடையே உள்ள பகுதி ________ மண்டலம்.

(அ) கடற்கரை **(ஆ) குறைவறட்சி** (இ) கங்கை சமவெளி (ஈ) வடகிழக்கு இந்தியா

25) பாராகாக்கஸ் மார்ஜினேட்டஸ் என்பது ________ வைக் குறிக்கிறது.

(அ) திலேப்பியா **(ஆ) பப்பாளி மாவுப்பூச்சி** (இ) ஆப்பிள் நத்தை (ஈ) வெளியூர் மண்புழு

26) டோடோ பறவையின் அழிவு கல்வாரியா மரத்திற்கு உடனடி ஆபத்தாக அமைவதை ________ என்று கூறலாம்.

**(அ) இணை மரபற்றுப் போதல்** (ஆ) வாழிட இழப்பு (இ) மிகை பயன்பாடு (ஈ) வாழிடம் துண்டாடப்படுத்தல்

27) இந்தியாவில் ஏறத்தாழ ________ க்கும் அதிகமான பறவைகள் உள்ளன.

**(அ) 1200** (ஆ) 2000 (இ) 2500 (ஈ) 1000

28) ________ தேசிய பூங்கா ஒற்றைக் கொம்பு காண்டாமிருகத்திற்கு என பாதுகாக்கப்பட்ட பகுதியாகும்.

**(அ) காசிரங்கா** (ஆ) கிண்டி (இ) முதுமலை (ஈ) முக்குர்த்தி

29) எந்த விலங்கானது சமீபத்தில் அழிந்தது?

(அ) டைனோசார் **(ஆ) டோடோ பறவை** (இ) கம்பளி பூச்சி (ஈ) ஆர்க்கியாப்டெரிக்ஸ்

30) வனவிலங்கு புகலிடத்திற்காக ஒதுக்கப்பட்ட பகுதி எது?

**(அ) தேசியப் பூங்கா** (ஆ) தாவரப் பூங்கா (இ) சரணாலயம் (ஈ) காடுகள்

31) காசிரங்கா தேசியப் பூங்கா எதற்கு புகழ்பெற்றது?

(அ) புலி (ஆ) கஸ்தூரிமான் (இ) யானை **(ஈ) காண்டாமிருகம்**

32) தோராயமாக அழிந்து வரும் பூக்கும் தாவரங்களின் சதவிகிதம் எவ்வளவு?

(அ) 63% (ஆ) 53% **(இ) 33%** (ஈ) 23%

33) சிங்கங்கள் எங்கே காணப்படுகின்றன?

(அ) கார்பெட் தேசிய பூங்கா (ஆ) மத்தியப் பிரதேசம் **(இ) கிர் காடுகள்** (ஈ) மேற்கு தொடர்ச்சி மலைகள்

34) இந்தியாவில் காணப்படும் பிரச்சனைக்குரிய அமெரிக்காவின் நீர் களைச் செடி எது?

(அ) ட்ராபா (ஆ) சைப்ரஸி (இ) தைபா **(ஈ) ஐகார்னியா**

35) சிப்கோ இயக்கம் எதனுடன் தொடர்புடையது?

**(அ) காடுகளை பாதுகாப்பதற்கு** (ஆ) தாவரக் கலப்பு (இ) இயற்கை மூலாதாரங்களை பாதுகாத்தல்
(ஈ) புலி பாதுகாப்புத் திட்டம்

36) வனவிலங்குகள் எதனால் அதிகம் அழிக்கப்படுகிறது?

(அ) சரியாக பராமரிக்கப்படாததால் (ஆ) அதிக அளவில் வேட்டையாடுதல்
**(இ) இயற்கை வாழிடங்கள் அழிக்கப்படுதல்** (ஈ) இயற்கை பேரழிவு

37) காடுகளை உருவாக்குவதற்கு எதைப் பயன்படுத்த வேண்டும்?

(அ) அயல் நாட்டு இனங்கள் **(ஆ) உள் நாட்டு இனங்கள்** (இ) மூங்கில்கள் (ஈ) யூகளிப்டஸ்

38) விலங்குகளும் தாவரங்களும் எங்கே சிறந்த முறையில் பாதுகாக்கப்படுகிறது?

(அ) விலங்கு காட்சி சாலை (ஆ) தாவரப்பூங்கா (இ) சரணாலயங்கள் **(ஈ) தேசியப் பூங்கா**

39) காண்டாமிருகங்களுடன் தொடர்புடைய தேசிய சரணாலயம் எது?

(அ) கார்பெட் (ஆ) ராத்தான் போர் **(இ) காசிரங்கா** (ஈ) எதுவுமில்லை

40) கீழே கொடுக்கப்பட்டவற்றில் சரணாலயத்துடன் பொருந்துவது எது?

(அ) காசிரங்கா கஸ்தூரிமான் (ஆ) கிர் சிங்கம் (இ) வடகிழக்கு இமயமலை சாம்பர் மான்
**(ஈ) சுந்தரவன காடுகள் - காண்டாமிருகம்**

41) ஃபிளமிங்கோ பறவையின் இனப்பெருக்கப் பகுதி இந்தியாவில் எது?

(அ) சாம்பார் ஏரி **(ஆ) சில்கா ஏரி** (இ) கட்ச் பதியின் ரன் (ஈ) கானா விகார்

42) பாண்டிபூர் (கர்நாடகா) தேசிய பூங்கா எதனுடன் தொடர்புடையது?

(அ) மயில் (ஆ) மான் (இ) புலி **(ஈ) யானை**

43) சிவப்பு பட்டியல் எதனுடன் தொடர்புடையது?

(அ) ஓரிடச் சார்பு தாவரங்கள் (emdemic) (ஆ) அழிந்த தாவரங்கள் (Extinct) (இ) ஒளிக்காலத் தாவரங்கள்
**(ஈ) அழிவின் விளிம்பில் உள்ள தாவரங்கள்**

44) கீழே கொடுக்கப்பட்டுள்ள எந்தத் தாவரமானது மிகைப்பயன்பாட்டின் காரணமாக அழிவின் விளிம்பில் உள்ளது?

**(அ) போடோபைலம்** (ஆ) செரிடெல்லா (இ) குளோரியோஸா (ஈ) அனைத்தும்

45) MABP என்பதன் விரிவாக்கம் எது?

(அ) மனிதன் மற்றும் உயிரிய திட்டம் **(ஆ) மனிதன் மற்றும் உயிர்கோளத் திட்டம்**

(இ) பாலூட்டிகள் மற்றும் உயிர்கோளத் திட்டம் (ஈ) பாலூட்டிகள் மற்றும் உயிரிய திட்டம்

46) மிக அதிகமாக பாதுகாக்க வேண்டிய விலங்குகள் எது?

(அ) சிங்கம் மற்றும் சிறுத்தை (ஆ) புலி மற்றும் பறவை **(இ) இமயமலைக் கரடி மற்றும் கஸ்தூரிமான்**

(ஈ) யானை மற்றும் முதலை

47) பாதுகாப்பிற்கான புதிய உத்தி எதனால் சாத்தியமாகும்?

(அ) சரணாலயங்கள் **(ஆ) உயிர்கோள இருப்பு** (இ) தேசிய பூங்காக்கள் (ஈ) இருப்பு காடுகள்

48) பூமத்திய ரேகையை ஒட்டிய பகுதிகளில் உயிரிய பல்வகைத்தன்மை மிகுந்து காணப்படுகிறது. இதற்கு காரணம் ________.

(அ) இப்பகுதிகளில் உயிரினங்களின் வளர்சிதை மாற்றத்திற்கு சாதகமான வெப்பநிலை நிலவுகிறது.

(ஆ) குறிப்பிட்ட இடைவெளியில் புயல் உருவாவதில்லை

(இ) கோடைக்காலத்தில் நிலவும் மிக அதிக வெப்பநிலை தாவரங்களுக்கு சாதகமாக உள்ளது.

**(ஈ) நீண்ட பகல்பொழுது ஒளிச்சேர்க்கைக்கு பயனுள்ளதாக உள்ளது.**

49) தவறான இணையைக் கண்டுபிடி.

(அ) இந்திய பாலைவனம் - குஜராத் (ஆ) இமயமலைக்கு அப்பால் உள்ள பகுதிகள் - லாகுலா ஸ்பிடி

**(இ) மேற்கு தொடர்ச்சி மலை - ஆந்திர பிரதேசம் முதல் மத்திய பிரதேசம் வரை**

(ஈ) வடகிழக்கு இந்தியா இந்தியா + மலேயா உயிரி - புவியியல் பகுதி

50) கேரளாவில் உள்ள பெரியார் வனவிலங்கு சரணாலயம் எந்த விலங்குகளுக்கு புகழ் பெற்றது?

**(அ) இந்திய புலி மற்றும் ஆசிய யானை** (ஆ) இந்திய சிங்கம் மற்றும் இந்திய யானை

(இ) முட்தோலி எறும்புத்திண்ணி மற்றும் செதில் எறும்புத்தின்னி (ஈ) அனகோண்டா பாம்பு மற்றும் மலைபாம்பு